தமிழ்ப் பல்கலைக் கழகச்

# செய்தி மலர்

மலர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2019 — சித்திரை - 2 - 14-4-88 இதழ்: 1

## தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்து

முனைவர் ச. அகத்தியலிங்கம்
துணைவேந்தர்


தஞ்சாவூர்
விபவ ஆண்டு சித்திரைத்
திங்கள் முதல் நாள்



தமிழும் தமிழரும் வாழவும் வளம் பெறவும் இத் தமிழ்ப்புத்தாண்டு நாளில் வாழ்த்துகிறேன். உலகெங்கும் உள்ள தமிழர்கள் அனைவரும் தமிழ் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு அயராது உழைக்க உறுதிகொள்ள வேண்டுகிறேன். இம்முயற்சியில் தமிழ்ப் பல்கலைக் கழகம் முன்னணியில் நின்று ஆவன அனைத்தும் செய்யும் எனவும் உறுதி கூறுகிறேன்.

— துணைவேந்தர்.

## திருமுறைகளும் சைவ சித்தாந்தமும் கருத்தரங்கு



தமிழ்ப் பல்கலைக் கழக இலக்கியத் துறையின் சார்பில் "திருமுறைகளும் சைவ சித்தாந்தமும்" பற்றிய கருத்தரங்கு 25, 26–3–'88 ஆகியநாள்களில் அரண்மனை வளாகக் கருத்தரங்க அறையில் சிறப்பாக நடைபெற்றது.

கருத்தரங்கத் தொடக்கவுரை வழங்கிய தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம், ஆதீனத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பினை இயைபுபடுத்தி உரையாற்றினார். தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராமு இக்கருத்தரங்கில் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

தருமையாதீனக் குருமகா சந்நிதானம் திருமுறைப் பாடல்களைப் பண்ணோடுபாடிச் சித்தாந்தச் சிந்தனைகள் திருமுறைகளில் விரவியும் பரவியும் விளங்கும் பாங்கினைத் தக்க சான்றுகள் காட்டிப் பேருரை நிகழ்த்தினார்.

தமிழ்நாடு அரசு தொழில் முதலீட்டுக்கழகத்தின் தலைவர் திரு டி.வி. வேங்கடராமன், சிவத்திரு தத்புருடதேசிகர், முனைவர் டி. பி. சித்தலிங்கையா, முனைவர் வை. இரத்தின சபாபதி உள்ளிட்ட பலரும் திருமுறைகளில் காணப்பெறும் சித்தாந்தச்சிந்தனைகள், மெய்கண்ட நூல்களின் தோற்றத்திற்கு அடிப்படையாய் அமைந்ததனை ஆராய்ந்து உணர்த்தினர்.

பல்வேறுகல்லூரிகளிலிருந்தும் திரளாக ஆசிரியர்களும் மாணவர்களும் கருத்தரங்கு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இலக்கியத் துறைத்தலைவர் முனைவர் சோ. ந. கந்தசாமி வரவேற்புரைநிகழ்த்தினார். முனைவர் தா. ஈசுவரப்பிள்ளை நன்றி நவின்றார்.

## அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழக முதலாவது கருத்தரங்க மாநாடு

பல்கலைக் கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் தமிழ்ப் பல்கலைக் கழகமும் அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகமும். இணைந்து 1988 மே மாதம் 28, 29 நாள்களில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இம் மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

தமிழ்வழி அறிவியல் பரப்புதல் – முறைகளும் உத்திகளும், அறிவியலும் சமுதாயமும், கலைச் சொல்லாக்கமும் அறிவியல் தமிழ் அமைப்பும் ஆகிய பொருள் குறித்த கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. மேற்கொண்டு விவரம் பெற, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:–

முனைவர் இராம. சுந்தரம்
அறிவியல் தமிழ்த் துறைத் தலைவர்
புதிய வளாகம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் – 613 005

## சுவடிப் பதிப்பு நெறிமுறைகள் – கருத்தரங்கு

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஓலைச்சுவடித்துறை ஒன்றை நிறுவி அதில் பழைய சுவடிகளைப் பொதுமக்களிடமிருந்து பெற்றுப் பாதுகாத்து வருகிறது. அத்துறையின் முதலாம் கருத்தரங்கு 'சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்' என்னும் தலைப்பில் 22, 23,24-3-'88 ஆகிய மூன்று நாள்களில் புதிய வளாக மொழிப்புலக் கருத்தரங்கு அறையில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் தலைமையுரையுடன் முதல்நாள் விழா தொடங்கியது. விழாவில் பதிப்பாசிரிய முன்னோடியாம் சீலத்திரு ஆறுமுக நாவலரின் திருவுருவப் படத்தைத் துணைவேந்தர் திறந்துவைத்துச் சிறப்பித்தார். கருத்தரங்கக் கட்டுரை மலரைத் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு மா.இராமு,இ.ஆ.ப., வெளியிட்டுச் சிறப்புரை நிகழ்த்தினார். தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் முனைவர் பெ.சின்னையன் கருத்தரங்க மையக் கருத்துரை வழங்கியதோடு வரலாற்றுச் சுவடிகளைப் பதிப்பிக்கும் முறைகள் குறித்த தம் முதற் கட்டுரையையும் வழங்கினார்.

விழாவின் இறுதியில் பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசுவாமி அடிகளார், தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடிப்புல முன்னாள் தலைவர் பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளை, தஞ்சை வழக்கறிஞர் திரு தி.ந. இராமச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மூன்று நாள்கள் நடந்த கருத்தரங்கில்,ஐந்து அமர்வுகளில் இருபதுக்கும் மேற்பட்ட அறிஞர்களும், ஆய்வாளர்களும் கலந்து கொண்டு கட்டுரைகள் படித்தனர்.

– ஓலைச்சுவடித்துறை

## வைணவத் தத்துவப் பள்ளிகள் – கருத்தரங்கு

'கல்வியில் கரையிலாக் காஞ்சி மாநகர்' என்னும் சிறப்புவாய்ந்த காஞ்சிபுரம் சைவம்,வைணவம்,பௌத்தம் முதலான சமயங்களின் வளர்ச்சியிலும் பெரும்பங்கு வகித்து வந்துள்ளது. பழஞ்சிறப்புடைய இவ்வூரில் அமைந்துள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தத்துவ மையம்,தமிழ்நாடு தத்துவ மன்றத்துடன் இணைந்து 27,28-2-'88 ஆகிய இரண்டு நாள்கள் 'வைணவத் தத்துவப் பள்ளிகள்' என்னும் தலைப்பில் கருத்தரங்கை நடத்தியது.

இக்கருத்தரங்கிற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தத்துவத் துறைத் தலைவர் முனைவர் ஏ.எசு. பிள்ளை தலைமையுரை நிகழ்த்தினார். தமிழ்ப் பல்கலைக் கழகத் தத்துவ மைய இயக்குநர் முனைவர் பி.கே. சுந்தரம் கருத்தரங்க மையக் கருத்துரை வழங்கினார்.

கருத்தரங்கத் தொடக்க நாளன்று காஞ்சி காமகோடி பீடாதிபதி திருப்பெருந்திரு செயேந்திர சரசுவதி சுவாமிகள் கருத்தரங்கிற்கு வந்திருந்து கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி ஆசியுரை வழங்கினார்கள்.

தமிழ்நாடு தத்துவ மன்றச் செயலாளர் முனைவர் எசு.ஓ.இராமகிருட்டிணன் நன்றி நவில, கருத்தரங்கு இனிது முடிந்தது.

## கணிப்பொறி – ஓர் அறிமுகம் – பயிற்சி வகுப்பு

'கணிப்பொறி' பற்றிய அடிப்படை அறிவினை அறிந்திருத்தல் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத ஒன்றாகும். 'கணிப்பொறி அறிவியல்', பள்ளி மற்றும் கல்லூரிகளில் புகுத்தப்பட்டுள்ள நிலையில் ஆசிரியர்கள் இதுபற்றிய அடிப்படை அறிவைப் பெற வேண்டியது இன்றியமையாததாகும்.

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பது போன்று 'எங்கும் கணிப்பொறி எதிலும் கணிப்பொறி' எனப் பேசப்படும் காலம் இது.தமிழ் இளைஞர்கள் கணிப்பொறி வல்லுநர்களாக அறிவியல் வளர்ச்சியில் வளரவேண்டும் என்பது தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆசை.இந்நிலையில் தஞ்சை மாவட்டத்திலுள்ள மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கணிப்பொறிப் பயிற்சி அளிக்க, தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம், தஞ்சை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு ப.மாதவன்பிள்ளை, தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப்பொறிமையப் பேராசிரியர் கா.செ.செல்லமுத்து ஆகியோர் கூடிய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதன் தொடக்க விழா 9-3-'88 அன்று அரண்மனை வளாகக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

தஞ்சைமாவட்டத்திலுள்ள மேல்நிலைப்பள்ளிகளிலிருந்தும் உயர்நிலைப்பள்ளிகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 300 ஆசிரியர்கள் இவ்வகுப்பில் பயிற்சி பெற்றனர். இப்பயிற்சி வகுப்பின் தொடக்கவிழா உரையாற்றிய துணைவேந்தர்,

> "ஒவ்வொரு பல்கலைக் கழகமும் அந்தந்த மாவட்டங்கள் அல்லது அந்தந்த இடங்களில் சில நல்ல செயல்களைச் செய்தால் பல்கலைக் கழகத்தின் பணி நல்ல பணியாக இருக்கும்.மேலும் தமிழக இளைஞர்கள் கணிப்பொறி அறிவுபெற்று அறிவியல்வளர்ச்சிக்குத் துணைபுரிந்தால்தான் தமிழகம் எதிர்காலத்தில் வளமாக வளரமுடியும். அந்த அடிப்படையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் இப் பயிற்சி வகுப்பை நடத்துகிறது. உயர்நிலை வகுப்புகளும், ஆராய்ச்சி நிறுவனங்களும் சேர்ந்து பணி செய்தால் மாணவர்களிடத்திலும், அதன்மூலம் மக்களிடத்திலும் நல்ல நிலைகளை உருவாக்கமுடியும்.ஆசிரியர்கள் இதற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும். தஞ்சை மாவட்டம் மட்டுமன்றி தமிழகம் முழுவதும் இதன் தாக்கம் செல்ல வேண்டும்!"

என்று குறிப்பிட்டார்.

## வைணவம், சைவம் – கருத்தரங்கு

'தமிழ் மூலங்களிலிருந்து வைணவம், சைவம்' என்னும் தலைப்பில் காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத் தத்துவ மையத்தின் சார்பில் 24-3-'88 அன்று கருத்தரங்கு நடைபெற்றது.




"சைவமும் வைணவமும் இரு கண்கள். தமிழ் இலக்கியப் பரப்பில் இவ்விரு சமயத் தத்துவங்களும் கோட்பாடுகளும் விரிந்து காணப்படுகின்றன. எனவேதான் தமிழை, 'தெய்வத் தமிழ்' என்கிறோம். அருள்மிகு நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமிழுக்கும் சைவ வைணவ சமயங்களுக்கும் செய்த தொண்டு அளப்பரியது" என்று தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் கருத்தரங்கிற்குத் தலைமையேற்று, தொடக்க விழாப் பேருரை நிகழ்த்தினார்.

வித்துவான் கே. வேளுக்குடி வரதாச்சார்யாசுவாமிகள் தலைமையில் வைணவம் பற்றி முனைவர் தெ. ஞானசுந்தரம், முனைவர் கே. ஏ. மணவாளன், முனைவர் எம். ஏ. வேங்கட கிருட்டிணன், முனைவர் அரங்கசாமி ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகள் படித்தனர்.

'மகாவித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார் தலைமையில் சைவம்பற்றி முனைவர் வை. இரத்தினசபாபதி, முனைவர் ஆ. ஆனந்தராசன், முனைவர் இரா. கோலப்பப் பிள்ளை ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகள் படித்தனர். வைணவ, சைவ சமயப் பெரியோர்கள் கலந்துரையாடலில் கலந்துகொண்டு அரிய கருத்துக்களை வழங்கினர்.

தத்துவ மைய இயக்குநர் பி.கே. சுந்தரம் நன்றியுரையுடன் விழா முடிவுற்றது.

– தத்துவ மையம்

## நாட்டுப் புறவியல்–கருத்தரங்கு

நாட்டுப்புறவியல் பற்றிய இருநாள் கருத்தரங்கு 19, 20-3-'88 ஆகிய நாள்களில் தமிழ்ப் பல்கலைக் கழக நாட்டுப்புறவியல் துறையின் சார்பில் புதிய வளாக மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் தலைமை தாங்கி, கருத்தரங்கத் துவக்கவுரையாற்றினார். துணைவேந்தர் தம்துவக்கவுரையில் "அமெரிக்க நாட்டுப்புறவியல் நிறுவனம் ( American Folklore Association ) நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறநேரத்தில் இத்துறையைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் தொடங்கியுள்ளோம். 'நாட்டுப் புறவியல்' மக்களால் பரம்பரைபரம்பரையாக மரபுவழிஊடாக்கப் பட்ட ஆக்கங்கள், எழுத்துருவம் இல்லாத மொழிகளைக் கொண்ட மக்களிடையே காணப்படுவன, கலாச்சாரத்தின் ஒரு பகுதி, பழமையான நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை ஆராய்வதாகும்என்றும் வழக்காறுகளை மட்டுமன்றி அவ்வழக்காறுகளைப்பற்றி ஆராயும் இயலையும் இச்சொல் குறிக்கிறது என்றும் குறிப்பிட்டார். அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில்கூட நம்பிக்கைக்கும் சடங்குகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை அறிய இவற்றையெல்லாம் ஆராயும் நோக்கோடு இத்துறை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் துவக்கப்பட்டுள்ளது" – என்று கூறினார்.

இக்கருத்தரங்கு நான்கு அமர்வுகளாக முனைவர் குருவிக்கரம்பை சண்முகம், முனைவர் ஏ. என். பெருமாள், முனைவர் க. ப. அறவாணன், முனைவர் லூர்து ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. முப்பதுக்குமேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பெற்றன.

நாட்டுப்புறவியல் துறைத்தலைவர் முனைவர் சு. சக்திவேல் வரவேற்புரை நிகழ்த்தினார். முனைவர் ஆறு. இராமநாதன் நன்றியுரையுடன் கருத்தரங்கு நிறைவுற்றது.

– நாட்டுப்புறவியல் துறை.

## சிதம்பரம் நடராசர் கோயில் திருப்பணி –டச்சுக் கம்பெனியார் நிதியுதவி

சைவர்களின் தலைசிறந்த கோயில் சிதம்பரம் நடராசர் கோயில். இக்கோயிலின் திருப்பணிக்குக் கிறித்துவமதத்தைச் சேர்ந்த ஆலந்து நாட்டினர் தங்களுக்குள்ளே வசூல்செய்து கொடையாக அளித்த அரிய செய்தி செப்பேட்டின் மூலம் தெரிய வருகிறது.

சிதைந்து கிடந்த கோயிலின் பலபகுதிகளை 18-ஆம் நூற்றாண்டில் புதுப்பிக்கும் பணியைச் சண்முகத் தம்பிரான் என்பவர் தொடங்கினார். திருப்பணிக்கு வணிகர்கள் பலரும் உதவினர்.

பறங்கிப்பேட்டையில் வணிகம் செய்தஆலந்து நாட்டுக் கம்பெனியர் கி.பி.1747-ஆம் ஆண்டு சனவரி மாதம் தாங்கள் விற்கும் பொருளுக்கு வராகனுக்கு வீசம்(1/16) வீதம் மகமை நிர்ணயித்து வசூல் செய்து சண்முகத் தம்பிரானிடம் அளித்தனர்.

பறங்கிப் பேட்டைப் பகுதியில் ஆலந்து நாட்டுக் கம்பெனியினர் துணி வணிகத்தில் ஈடுபட்டிருந்ததுடன் துணி நெய்யும் தொழிற்சாலையும் அவர்கட்கு இருந்தது என்பது இச்செப்பேட்டால் அறியமுடிகிறது. இச் செப்பேடு திருப்பனந்தாள் காசி மடத்தில் உள்ளது.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

# செய்தி மலர்

திங்களிதழ்
பதிவெண் 15033/82X1

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 007.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

அதிகாரி
...ராசா சரபோசி
மகால் நூலகம்

## திருவரங்கம் அரங்கசாமிப் பிள்ளை

மதுரை சோமசுந்தரம் அவர்கள் தம்முடைய இசை நிகழ்ச்சிகளில் பாடிக் கொண்டு வருவதும், திரையிசையில் புகழ்பெற்றதுமான "யார் உன்னைப் போல் ஆதரிப்பவர் ஆறுமுகத்தரசே" என்னும் அடாணா இராகத்திலமைந்த பாடலை இயற்றியவர் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவரங்கம் மூலவீடு அரங்கசாமிப் பிள்ளை என்னும் இயலிசைப் புலவராவார். இவர் இதுபோன்று 56 தமிழ்க் கீர்த்தனைகளும், ஒரிரு பதங்களும் இயற்றியுள்ளார்.

— இசைத்துறை

## அச்சில்

1. தொல்காப்பியம் — சொல்லதிகாரம்
   — பதிப்பாசிரியர்: அடிகளாசிரியர்
2. கேரளத் தமிழர்களும் அவர்களின் சிக்கல்களும்
   — உ. சுப்பிரமணியம்
3. உடற்கூறு — முதற் பகுதி (கை, நெஞ்சு)
   — எம். முத்து
4. அடிப்படைக் கட்டுமான வடிவமைப்பு
   — இலெ. சு. செயபால்
5. புதையல் தேடிக் கடலில் மூழ்குதல்
   — செ. இரெ. செயச்சந்திரன்
6. சட்டத் தமிழ் அகராதி
   — மா. சன்முக சுப்பிரமணியம்
   புலமை வேங்கடாசலம்
7. அறுவகை இலக்கணம்
   — பதிப்பாசிரியர்: புலவர் ப. வெ. நாகராசன்
8. சித்தமருத்துவ நூலோதி
   — சே. பிரேமா
9. வடமாநிலங்களில் தமிழர் - ஆய்வு அறிக்கை
   — சோமலெ
10. வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை — அறிமுகமும் ஆய்வுகளும்
    — ஆறு. இராமநாதன்

## வெளிவரவிருக்கும் புதிய நூல்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கீழ்க்கண்ட புதிய நூல்களை 27-4-'88 புதனன்று தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைமையில் தமிழக ஆளுநர் மேதகு பி. சி. அலெக்சாண்டர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியில் வெளியிடுவார்.

| | விலை உரு. |
|---|---|
| 1. வாழ்வியற் களஞ்சியம் — தொகுதி-6 | 300/- |
| 2. நுண்கலைகளும் இராகங்களும் — து. ஆ. தனபாண்டியன் | 50/- |
| 3. மூவர் திருமுறைப் பாடல்கள் — து. ஆ. தனபாண்டியன், ஞானா குலேந்திரன் | 20/- |
| 4. வியாசரும் வில்லியும் — ஒரு திறனாய்வு — ச. கு. கணபதி | 26/- |

## களஞ்சிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| அறிவியற் களஞ்சியம் | தொகுதி-1 | உரு. 300/- |
| " " | தொகுதி-2 | உரு. 300/- |
| " " | தொகுதி-3 | உரு. 300/- |
| வாழ்வியற் களஞ்சியம் | தொகுதி-1 | உரு. 300/- |
| " " | தொகுதி-2 | உரு. 300/- |
| " " | தொகுதி-3 | உரு. 300/- |
| " " | தொகுதி-4 | உரு. 300/- |
| " " | தொகுதி-5 | உரு. 300/- |
| சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் | தொகுதி-1 | உரு. 250/- |
| " " | தொகுதி-2 | உரு. 250/- |

கழிவு: 25% அஞ்சற் செலவு தனி

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் - 613 001